# பழமொழிகள்

1) கனடாவில் பணிபுரியும் அமுதன் அங்குள்ள வாழ்க்கை முறையைப் பின்பற்றி வாழ்கிறான்.

2) தம்பியின் செயலால் கோபம் கொண்ட தீபன் தன் கையிலுள்ளப் பொருளை வேகமாக வீசினான்.

3) ஓட்டப் போட்டியில் முதலிடத்தைப் பெறுவதாக உறுதி பூண்ட எழிலன், தினமும் பயிற்சி செய்து வருகிறான்.

4) கனிமொழி ஒரு நடனப் பள்ளியைத் தொடங்கினா. அவளது இந்த முயற்சி வெற்றியடைய இறைவனிடம் வேண்டினாள். இன்று அவள் நடத்தும் பள்ளி மிகச் சிறப்பாக இயங்கி வருகிறது.

5) சிறுவயதிலேயே சதுரங்க விளையாட்டில் மிகுந்த ஆர்வம் கொண்ட பிரவினா, தற்போது தேசிய அளவிலான சதுரங்க விளையாட்டுப் போட்டிக்குத் தகுதி பெற்றுள்ளாள்.

6) கபிலன் ரஷ்யாவில் பணிபுரியும் ஒரு மருத்துவர். அவர குடும்பம் வறுமையில் இருந்த நிலையில் தன் கல்விச் செலவை ஏற்றுக் கொண்ட செல்வந்தரின் உதவியை கபிலன் இன்றும் மறவாமல் அவரை ஒவ்வொரு ஆண்டும் சென்று கண்டு நலம் விசாரித்து வருகிறார்.

| | |
|---|---|
| ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்ட | கடவுளை நம்பினோர் கைவிடப்படார் |
| ஊருடன் கூடி வாழ் | அழுத பிள்ளை பால் குடிக்கும் |
| உப்பிட்டவரை உள்ளளவும் நினை | ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா? |

LIVEWORKSHEETS